1984 மார்ச் 21]

மாவட்டந்தோறும் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம்.

376—(*வினா 18156)— டாக்டர் கே. சமரசம், திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் உள்ள சென்னை, நீலகிரி தவிர்த்து 14 மாவட்டங்களிலும் காய்கறி உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு முறையில் காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு மானியமும், மற்ற அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே அமைக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எந்தெந்த வகையிலே சிறப்பான இயல்புகளைப் பெற்றுள்ளன ? அவைகள் அரசிற்கு உதவியாக இலாபகரமாக இயங்குகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்திற்காக தமிழகம் முழுவதும் 44 காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்றைக்கு நீலகிரி, சென்னை தவிர, பாக்கியிருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் இதற்கு வேண்டிய உதவிகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்காக தராசு, எடைபொருட்கள் வாங்குவதற்கு 2,500 ரூபாய் உதவியும், கணக்கருக்கு மாத சம்பளம் 300 ரூபாய் கொடுக்கிற வகையில் வருடத்திற்கு 3,600 ரூபாய் மானிய உதவியாக கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் மூலம் கொடுக்கப்படுகிற உணவு சத்துள்ள உணவாக இருக்க வேண்டுமென்ற முறையில் வெங்காயம், வெண்டை, கத்தரி, முருங்கை, கீரை, முள்ளங்கி போன்ற காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 21

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக அமைக்கப்பட்டிருக்கிற காய்கறி சங்கங்கள் இருந்தாலும் தனியார்களிடத்தில் காய்கறிகளை வாங்குகின்ற பழக்கம் சத்துணவு அமைப்பாளர்களிடம் தொடர்கிறதா? ஆமெனில், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றிய குறிப்புக்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றும் திட்டம்.

(*309—வினா 17996) திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தைத் திருச்சிக்கு மாற்றும் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றும் திட்டத்தினை தற்போது அரசு தள்ளி வைத்துள்ளது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தை திருச்சிக்கு மாற்றும் திட்டம் இருப்பதாகவும், ஆனால் அது தற்போது அரசால் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி தமிழகத்தின் மையப் பகுதியாக இருப்பதால் நிர்வாக சௌகரியத்திற்கும் அது வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அத்திட்டம் போடப்பட்டது என்று கருதுகிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS